2011 ONTARIO BUDGET

Ontario

NEWS RELEASE

TURNING the CORNER TO A BETTER TOMORROW

MINISTRY of FINANCE

# வேலைவாய்ப்புக்களை உருவாக்கி, ஒன்ராறியோ பொருளாதாரம் திசைதிரும்புகிறது

*பாடசலைகளையும் மருத்துவ மனைகளையும் பாதுகாத்து, மக்கின்ரி அரசாங்கம் பற்றாக்குறையைக் குறைக்கிறது*

**செய்தி** மார்ச் 29, 2011

2011 வரவுசெலவுத் திட்டம் ஒன்ராறியோவின் பொருளாதார மீட்சிக்கான மக்கின்ரி அரசாங்கத்தின் ஆதரவைத் தொடர்கிறது. கல்வியையும் சுகாதார பராமரிப்பையும் பாதுகாக்கின்ற அதேவேளை, பற்றாக்குறையை நீக்கும் பணியை இந்த வரவுசெலவுத் திட்டம் புதுப்பிக்கின்றது.

2010-11 பற்றாக்குறை 16.7 பில்லியன் டொலராக எதிர்நோக்கப்படுகின்றது. இது ஒரு வருடத்திற்கு முன்னர் எதிர்வு கூறப்பட்டதைவிட 3 பில்லியன் டொலர் குறைவானது. செயல் திட்டச் செலவு 2010 வரவுசெலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்ட எதிர்வுகூறலைவிட, 2010-11இல் 2.6 பில்லியன் டொலர் குறைவாக எதிர்நோக்கப்படுவதே இதற்கான பிரதான காரணமாகும்.

2011 வரவுசெலவுத் திட்டத்தின் உபாய முதலீடுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

**வேலைவாய்ப்புக்களும் வளர்ச்சியும்**

- தனியார் துறையுடனான புதிய பங்குடமையானது 10,000 வேலைவாய்ப்புக்களை உருவாக்கி அவற்றை நிலைநிறுத்தி வரும்
- புதிய ஆபத்து முகாமைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தி, கால்நடை, பன்றி, செம்மறியாடு, மாட்டுக்கன்று விவசாயிகளுக்கு உதவுதலும், வேளாண்மைத் துறைக்கான ஒரு சுயநெறி ஆபத்து முகாமைச் செயல் திட்டமும்.

**கல்வியைப் பாதுகாத்தல்**

- 2015-16 அளவில் ஒன்ராறியோ கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் 60,000க்கும் அதிகமான புதிய மாணவ இடங்கள் உருவாக்கப்படும். தகுதி மிக்க ஒவ்வொரு ஒன்ராறியோ மாணவனுக்கும் அங்கு இடமிருக்கும்.
- இந்த செப்டம்பரில் 50,000 வரையிலான சிறுவர்கள் பயன்பெறும் வகையில், 200 மேலதிக பாடசாலைகளில் முழுநேரப் பாலர் வகுப்புக்கள் கிடைக்கும். தற்போது சுமார் 600 பாடசாலைகள் 35,000 வரையிலான சிறுவர்களுக்கு முழுநேர பாலர் வகுப்புக்களை வழங்குகின்றன. பாலர் வகுப்புக்கள் ஒவ்வொரு பாடசாலையிலும் கிடைக்கும் வகையில், 2014 செப்டெம்பரில் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

**சுகாதார பராமரிப்பைப் பாதுகாத்தல்**

- அதிக ஆபத்திலிருக்கும் பெண்களை இனங்காண சுமார் 90,000 மேலதிக மார்புப் புற்றுநோய் கண்டறி பரிசோதனைகள்
- சிறுவர்கள், இளைஞர்கள் ஆகியோருடன் ஆரம்பித்து, ஒரு விரிவான உளநல மற்றும் தீய பழக்கங்களுக்கு அடிமையாதல் அகற்றும் உபாயம்
- மருந்தக சேவைகளையும் Ontario Drug Benefit Program காப்புறுதிக்குத் தகுதி பெறுவோருக்கான ஆதரவையும் விரிவாக்குதல். மருந்துச் சீட்டுப் பின்தொடர் ஆலோசனைகள் போன்றவற்றில் முதியவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உதவுதல்

…/2

**பொறுப்புடன் நிர்வகித்தல்**

பொருளாதார வளர்ச்சியையோ அல்லது கல்வியிலும் சுகாதார பராமரிப்பிலும் ஒன்ராறியோவாசிகள் பெற்ற பலாபலன்களையோ, அச்சுறுத்தாமல் பற்றாக்குறையை அகற்ற உதவுவதற்கு, அரசாங்கமானது தான் செயற்படும் முறையை மேலும் சீர்திருத்த வேண்டும். அண்மைக்கால முன்னெடுப்புக்களும், இந்த வரவுசெலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவைகளும் அடுத்துவரும் மூன்று நிதியாண்டுகளில் சுமார் 1.5 பில்லியன் டொலர் சேமிப்பினைப் பெற உதவும். பின்வருவன உட்பட, ஒன்ராறியோ வாசிகளுக்குப் பொதுச் சேவைகளை மேலும் இயலுமாவையாகவும் நல்விளைவு தரக்கூடியனவாகவும் ஆக்கும் வகையிலான பல நடவடிக்கைகள் உள:

- தற்போதய ServiceOntario முறைமை மக்களுக்கு மிகச் சிறந்த பெறுமதியையும் சேவையையும் வழங்குகிறதா எனக் கண்டறிதல்
- 2013-14 அளவில் பிரதான முகவர் நிலையங்கள் வினைத்திறன்கள் மூலமாகத் தமது செலவினங்களை 200 மில்லியனால் குறைக்க வேண்டும்.
- மாற்றுக் கொடுப்பனவு பெறுபவர்களின் நிர்வாக அலுவலகங்களுக்கான நிதியளிப்பை இரண்டு வருடங்களில் 10 சதவீதத்தினால் நிரந்தரமாகக் குறைத்தல். இக்கொள்கை பிரதான அரச முகவர் நிலையங்களுக்கும் பிரயோகிக்கப்படும்.
- ஏப்ரல் 2012 - மார்ச் 2014 கால இடைவெளியில், ஒன்ராறியோ பொதுச் சேவையின் (OPS) பருமனை மேலும் 1,500 இடங்களால் குறைத்தல். இது 2009 வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 3,400 முழுநேர OPS ஊழியர்களின் குறைப்புக்கும் மேலான குறைப்பு எண்ணிக்கையாகும்.
- சிறைச்சாலை அமைப்பை மேலும் நவீனமானதாகவும் திறமையானதாகவும் ஆக்குதல். குறைந்த பாவனையிலுள்ள ஓவன் சவுண்ட், வாக்கற்ரன், சார்ணியா சிறைச்சாலைகளை மூடுவதாலும், ரொறொன்ரோ மேற்கு தடுப்பு நிலையத்தின் ஒரு பகுதியை மூடுவதாலும் வினைத் திறன்கள் அதிகரிக்கும். புதிய, பாரிய, மேலும் திறன்மிக்க இடங்களுக்கு கைதிகள் இடம் மாற்றப்படுவர்.
- ரொறொன்ரோ மேற்கு நீதிமன்ற நிர்மாணத்தை இரத்துச் செய்வதால் அடுத்து வரும் மூன்று வருடங்களுக்கு 181 மில்லியன் டொலர் மாற்றுப் பயன்பாட்டுச் சேமிப்பு உருவாகும்.
- பற்றாக்குறையை அகற்றும் எமது திட்டங்களைத் துரிதப்படுத்த உதவும் மாற்றங்களை அறிவுறுத்தும் வகையில், மதிப்புக்குரிய பொருளியலாளர் டொன் ட்ரமண்ட் தலைமையின் கீழ், ஒன்ராறியோவின் பகிரங்க சேவைகளின் சீர்திருத்தம் தொடர்பான ஆணைக்குழுவை நிறுவுதல். ஆயினும் சுகாதாரப் பராமரிப்பிலும் கல்வியிலும் தொடர்ந்து கவனம் செலுத்தப்படும்.

2011 வரவுசெலவுத் திட்டமானது பொரளாதாரத்தை வலுப்படுத்தவும், வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஊக்குவிக்கவும், பிரதான பொதுச் சேவைகளைப் பாதுகாக்கவும் ஏற்ற வகையில் மக்கின்ரி அரசாங்கத்தின் திறந்த ஒன்ராறியோ திட்டத்தை கட்டி எழுப்புகின்றது.

**கூற்றுக்கள்**

"எங்களில் பலர் முன்னொருபோதும் கேள்விப்பட்டிருக்காத, மிக மோசமான பொருளாதார மந்தம் இடம்பெற்று இரு வருடங்களின் பின்னர், ஒன்ராறியோ பொருளாதாரம் திசைதிரும்பி, வேலைவாய்ப்புக்கள் மீண்டும் இடம்பெறத் துவங்கியுள்ளன. நல்ல கல்வியறிவுடைய, ஆரோக்கியமான வேலைப்படை ஒன்று ஒன்ராறியோவின் பொருளாதாரத்தை வலுப்படுத்துகின்றது. முதலீடுகளையும் வேலைவாய்ப்புக்களையும் கவர்ந்திழுக்கின்றது." - டுவைட் டங்கன், நிதி அமைச்சர்

"பாடசாலைகள், மருத்துவ மனைகள், பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றைப் பாதுகாக்கும் அதேவேளை, பற்றாக் குறையை அகற்றுவதற்கெனப் பொறுப்புமிக்க திட்டம் ஒன்று எம்மிடம் உண்டு. பணத்துக்கான சிறந்த பெறுமதியை உறுதிப்படுத்தவென அரசாங்கம் செயற்படும் வழிமுறைகளில் இது மேலும் சீர்திருத்தங்களை வேண்டி நிற்கின்றது. மாற்று நடவடிக்கை – பூரண செயல் திட்டக் குறைப்பு – சுகாதார பராமரிப்பிலும், கல்வியிலும், ஒன்ராறியோவாசிகள் அடைந்த குறிப்பிடத்தக்க பலாபலன்களைத் தலைகீழாக மாற்றியமைத்துவிடும். மாகாணத்தின் பொருளாதார போட்டித்திறனை மழுங்கடித்துவிடும்." - டுவைட் டங்கன், நிதி அமைச்சர்

…/3

**மேலும் அறிந்துகொள்க**

2011 வரவுசெலவுத் திட்டத்தை வாசியுங்கள்.

2011 வரவுசெலவுத் திட்டம் மீதான பின்னணித் தகவல்களை வாசியுங்கள்
- ஒன்ராறியோவின் பொருளாதார வாய்ப்புநிலையும் நிதித் திட்டமும்
- பொறுப்புடன் நிர்வகித்தல்
- வலுவான கல்வியும் சுகாதார பராமரிப்பும் ஒரு வலுவான பொருளாதாரத்துக்கு ஆதரவளிக்கிறது

2011 ஒன்ராறியோ வரவுசெலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை வாசியுங்கள்
- சிறந்த எதிர்காலத்தை நோக்கித் திசைதிரும்புதல்
- சிறுவர்களின் உளநலம்
- ஒன்ராறியோ விவசாயிகளுக்கு உதவுதல்

ஒன்ராறியோ அரசாங்கத்தின் திறந்த ஒன்ராறியோ திட்டம் பற்றி மேலும் கற்றறிக

-30-


**ஊடக விசாரணைகளுக்கு மட்டும்:**
Andrew Chornenky, அமைச்சர் அலுவலகம், 416-325-9819
Scott Blodgett, நிதி அமைச்சு, 416-325-0324


**ontario.ca/finance-news**
Tamil

**பொது விசாரணைகளுக்கு அழையுங்கள் 1-800-337-7222**
(ஒன்ராறியோவில் மட்டும் கட்டணமற்ற தொலைபேசி)